[திரு. கி. தர்மலிங்கம்]

பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 49-வது அறிக்கை, மற்றும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1983—84 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில், வணிகம், போக்குவரத்துத் துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1989—90) அளித்த 46-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் 50-வது அறிக்கை.

மற்றும் 1960—61 மற்றும் 1962—63 முதல் 1969—70 வரையிலான ஆண்டுகளுக்குரிய தமிழ்நாடு அரசு கணக்குகள் குறித்த பொது நிறுவனங்கள் குழு தொடர்பான பத்திகள் பற்றிய குழுவின் (1986—87) முப்பத்தி நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை ஆகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-20

(ஈ) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. எ. ஏகாம்பர ரெட்டி, பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 1991—92 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது அறிக்கையினை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்).

(அ) வழக்குரைஞர் நல நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு சட்ட அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு.)

வாக்கெடுப்புக்கு விடுகிறபோது எந்த உறுப்பினரும் எழுந்து நின்று கொண்டிருக்கக்கூடாது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு. இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'

எனக் கோருகிறேன்.